# சட்டக்கலை அறிமுகம்–06

## معنى كلمة الفقه وتطوره

Moulavi M.M. Zakky BA (Hons)

## இஜ்திஹாதின் தோற்றம்:

இஜ்திஹாத் என்பது ஷரீஅத்திலுள்ள விரிவான ஆதாரங்களில் இருந்து, நடைமுறை சரீஅத் சட்டங்களைப் பெறுவதற்காக ஒரு அறிஞர் மேற் கொள்கின்ற ஆய்வுப் பணியாகும்.

இந்த அடிப்படையில், புதிதாகச் சட்டப் பிரச்சினைகள் தோன்றும் போது அல்குர் ஆன் மற்றும் நபிமொழிகளின் அடிப்படையில் ஆய்வு செய்து தீர்ப்புக்கள் வழங்கும் ஆற்றல் பெற்ற நபித்தோழர்கள் நியாயமான அளவில் காணப்பட்டனர். அன்று முதல் சட்டக்கலையின் அலகுகளில் ஒன்றாகக் கருதப்பட்டுவருகின்ற "இஜ்திஹாத்" என்பதை ஆரம்பித்துவைத்த சிறப்பு கலீபா உமர் (ரழி) அவர்களையும் அடுத்து அவரது மாணவர் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்களையும் சாரும். ஆகவே "இஜ்திஹாத்" என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற இந்த முறை ஸஹாபாக்களுடைய காலத்திலேயே தோற்றம் பெற்று விட்டது.

இஸ்லாமிய அரசின் அன்றாடத் தேவையை கருத்திற்கொண்ட கலீபா உமர் (ரழி) அவர்கள், மேற்படி ஆற்றல் பெற்ற நபித்தோழர்கள் நாட்டிலிருந்து வெளியில் செல்வதைத் தடைசெய்திருந்தார். ஆகவே, இவர்கள் ஜிஹாத், ஹஜ் போன்ற கடமைகளை நிறைவேற்றச் செல்வதற்குக் கூட கலீபா அவர்களிடம் நேரடியாக அனுமதி பெற வேண்டியிருந்தது.

இன்னும் சில நபித்தோழர்கள் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ள விடயங்களை, சற்றும் விலகாது, அவற்றின் நேரடியான கருத்தினடிப்படையில் அமுல் படுத்தினர். இவ்வாறானவர்களில் ஹஸ்ரத் இப்னு உமர் (ரழி) அவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

## "இஜ்மா:" வின் தோற்றம்:

இஜ்மா: என்பது: நபி (ஸல்) அவர்களுடைய வபாத்துக்குப் பிறகு அவரது உம்மத்தில் ஆய்வுப்பணியை மேற்கொள்ளும் ஆற்றல் பெற்ற ,ஒரே காலத்தில் வாழ்ந்த

www.manarudawa.org

அறிஞர்கள் அனைவரும் குறித்ததொரு சரீஅத் விவகாரத்தில் எடுக்கின்ற ஏகோபித்த முடிவாகும்.

ஸஹாபாக்களின் ஆரம்பகாலப் பகுதியில் அதிலும் குறிப்பாக கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள் , கலீப் உமர் (ரழி) அவர்கள் போன்றோரின் காலத்தில் "இஜ்மா:" (இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த முடிவு) தோற்றம் பெற்றது. இது (இஜ்மா:) அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களுக்கு உட்பட்டதொரு அம்சமாகும்

ஆனாலும், இது அல்குர்ஆன் மற்றும் ஹதீஸைப் போன்று சரீஅத்தின் தனியான தொரு மூலதாரமாக இல்லையா என்பது இன்றுவரை தொடர்கின்ற கருத்து முரண்பாடாகும். இதன் அடிப்படையில் சிலர் அதனைத் தனியான மூலாதாரங்களில் ஒன்றாகக் கருதுவர். இன்னும் சிலர் அதனைத் தனியானதொரு மூலாதாரமாக ஏற்க மறுப்பர்.

எது எவ்வாறாயினும் இம்முரண்பாடானது சட்டத்துறையில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஏனெனில், இரு சாராரும் இதன் அடிப்படையில் அமைந்த விடயங்களை ஏற்று நடைமுறைப்படுத்துகின்றனர். ஆகவே இம்முரண்பாடு வார்த்தை அளவில் அமைந்ததுதான்.

ஆகவே, கலீபாக்களான அபூபக்ர் (ரழி) மற்றும் உமர் (ரழி) ஆகியோரின் காலத்தில் தோன்றிய இந்த அடிப்படையை அவர்களை அடுத்து வந்தவர்கள் ஏற்று நடந்தனர்.

அல்குர் ஆன் அல்லது ஹதீஸ்களில் நேரடியாகத் தீர்வு இடம்பெறாத புதிய பிரச்சினைகள் தோன்றினால், கலீபா அவர்கள் சட்டத்துறை ஞானமும் ஆய்வு செய்கின்ற ஆற்றலும் பெற்றிருந்த நபித்தோழர்களை ஒன்று சேர்த்து அவர்களிடம் அவற்றை எடுத்துரைப்பார். அப்போது அவர்கள் ஆய்வு செய்து, அதன் இறுதியில், தமக்கிடையில் முரண்பட்டுக் கொள்ளாது ஏகமனதாக ஒரு முடிவை முன்வைத்தால் அதனை கலீபா ஏற்று நடைமுறைப்படுத்துவர், இதுவே "இஜ்ம:" என்றழைக்கப்பட்டது.

அவர்கள் தமது ஆய்வின் இறுதியில் முரண்பாடான கருத்துக்களுக்கு வந்துவிட்டால், அவற்றில் மிகச்சரியானதும் பொருத்தமானதுமாக தாம் கருதுகின்ற கருத்தை கலீபா நடைமுறைப்படுத்துவார். மேற்படி விவகாரங்களின் போது அவர்கள் மேற்கொண்ட ஆய்வுப்பணியே சட்டதுறையில் இஜ்திஹாத் என்றழைக்கப்பட்டது. இப்பணியில் ஈடுபடுவோர் முஜ்தஹித்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பது அறிஞர்கள் மத்தியில் முரண்பாடற்றதொரு விடயமாகும். மேலும், சரீஅத்துடன் தொடர்பான

www.manaruddawa.org

விவகாரங்களில் அறிஞர்கள் மத்தியில் முரண்பாடில்லாது ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்ட விட்டால், அதனை இஸ்லாமிய உம்மத்தினர் ஏற்று நடப்பது கடமையாகும். பிறகு, அதற்கு மாற்றமாக முடிவு எடுக்கின்ற அதிகாரம் யாருக்குமில்லை.

"இஜ்மா:" சாத்தியமானதா? இல்லையா? அவ்வாறே இது ஆதாரமாகுமா? இல்லையா? போன்ற கருத்து முரண்பாடுகளையும் சர்ச்சைகளையும் சிலர் கிளப்பிவிட்டாலும், பல விஷயங்களில் "இஜ்மா:" ஆகத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டும், அவை ஆதாரமாகக் கொள்ளப்பட்டும் உள்ளன என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எனவே, இதற்குப் பிறகு அதனை மறுத்துரைப்பதில் எந்த நியாயமும் பலனும் இல்லை. இதற்குக் கீழ்வருவன போதிய உதாரணங்கள் ஆகும்:

A. பாகப்பிரிவினையின் போது அனந்தரக்காரர்கள் பட்டியலில் "ஒரு பாட்டி" மாத்திரம் இடம் பெற்றால் அவருக்கு மரணித்தவருடைய சொத்தில் 1/6 பகுதி வழங்கப்படும். "பல பாட்டிகள்" இடம்பெற்றால் அதே 1/6 பகுதியை அவர்கள் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும் என்பது இஜ்மா: எனும் ஏகோபித்த முடிவாகும்.
B. ஒரு முஸ்லிமான ஆண் வேதக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதை அல்குர்ஆன் நேரடியாக அனுமதித்துள்ளது. அதே நேரம் ஒரு முஸ்லிம் பெண்னை ஒரு வேதக்காரனுக்குத் திருமணம் செய்து வைக்கலாகாது என்பது இஜ்மா: எனும் ஏகோபித்த முடிவாகும்.
C. கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களுடைய காலத்தில் அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டமை. இஜ்மா: இன் அடிப்படையிலாகும். இவ்வாறு இஜ்மா:விற்கு இன்னும் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

கலீபாக்களான அபூபக்கர் (ரழி), உமர் (ரழி) ஆகியோரின் காலத்துக்குப் பிறகு, ஏனைய ஸஹாபாக்களுடைய காலப்பகுதியில் ஏதாவது ஒரு விடயம் "ஏகோபித்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று கூறுவதற்கு சரியான ஆதாரம் தேவைப்படுகின்றது. ஏனெனில், அவ்விருவரதும் மறைவையடுத்து குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை ஆய்வு செய்து சட்டவிதிகளைப் பெறுகின்ற ஆற்றல் பெற்றிருந்த நபித்தோழர்கள் அழைப்புப் பணியில் ஈடுபடுவதற்காக உலகின் நாலா பகுதிகளிலும் பிரிந்து சென்றனர். இதனால் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, குறித்த தொருவிவகாரத்தில் ஏகமனதாக ஒரு முடிவுக்கு வருதல் என்பது அசாத்தியமானதொன்றாகிவிட்டது.

www.mannarudawa.org

ஆகவே, ஆரம்ப இரு கலீபாக்களுடைய மறைவுக்கும் பின்னர் ஏற்பட்டதொரு விவகாரம் தொடர்பாக சர்ச்சை எழுதுகின்ற போது, "இவ்விடயம் ஏகோபித்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று கூறுவதை விட, "இவ்விடயம் குறித்து அறிஞர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் இருப்பதாகத் தென்படவில்லை" என்று கூறுவது மிகச் சரியானதும் பொருத்தமானதும் ஆகும்.

மேலும், இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் "இஜ்மாஃ"வை மறுத்துரைக் கின்றார் என்றது தவறான செய்தியாகும். "யார் இஜ்மாஃவை வாதிடுகின்றாரோ அவர் பொய் சொல்கிறார்" என்று அவர் கூறியுள்ளது உண்மைதான். எனினும், இமாம் அவர்கள் இவ்வார்த்தையை, இஜ்மாஃவைப் புறக்கணிக்கும் நோக்கில் பயன்படுத்தவில்லை. கலீபாக்களான அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோரின் மறைவுக்குப் பின்னர், ஏனைய ஸஹாபாக்களுடைய காலத்தில் "ஒரு விடயம் ஏகோபித்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது" என்று கூறுவது மேற் கூறப்பட்ட காரணத்தின் அடிப்படையில் அசாத்தியமானது என்ற கருத்தில் தான் இமாம் அஹ்மத் (ரஹ்) மேற்படி வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

ஏனெனில், இக்காலப்பகுதியில் இஸ்லாத்தின் மூலாதாரங்களில், அல்குர்ஆன் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தது. ஹதீஸ்களும், அப்போது தோன்றிய புதுப் பிரச்சினைகளுக்கான தீர்வு (பத்வாக்) களும் வாய்வழிச் செய்திகளாக மாத்திரமே பரிமாறப்பட்டு வந்தன. ஒரு சில ஸஹாபாக்கள் மாத்திரம் தமது தேவையைக் கருத்திற்கொண்டு அவற்றைத் தம்மிடம் பதிவு செய்து வைத்து கொள்ளலாயினர்.

மேலும், ஸஹாபாக்களுடைய காலத்தின் இறுதிக் கட்டத்தில், கலீபா உஸ்மான (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அத்துடன் குழப்ப நிலை தலைவிரிக்க ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து கலீபா அலி (ரழி) அவர்களுடைய காலப்பகுதியில் குழப்பங்கள் உச்ச நிலையை அடைந்தன. இதன் பின்னணியில் இஸ்லாமிய உம்மத்தினரிடையே பிரிவுகளும், பிளவுகளும் தேன்றின. இந்தப் பிளவுகளினால் இன்றுவரை இஸ்லாமிய உம்மத் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அப்போது தோன்றிய சில பிரிவினர் தாம் சார்ந்து நிற்கின்ற குழுவினரின் கருத்துக்கு வலுவூட்டும் பொருட்டு ஹதீஸ்களை இட்டுக் கட்டத் துணிந்தனர். இவர்கள் சில சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) அவர்கள் கூறியதாகவும் சில வேலைகளில் பெரிய ஸஹாபாக்கள் கூறியாதாகவும் செய்திகளை இட்டுக்கட்டலாயினர். இவ்வாறு இட்டுக்கட்டியவர்கள் ஸஹாபாக்களல்லர். மாறாக இவர்களுடைய காலத்தில் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களாவர்.

இக்காலப்பகுதியிலும் சரீஅத்தின் சட்டக்கலை ரோம், மற்றும் பாரசீகப் பேரரசுகளின் சட்டங்களின் தாக்கத்திற்குற்படவில்லை. பாரசீகர்களிடம் இருந்தோ ரோமானியர் களிடமிருந்தோ ஸஹாபாக்கள் நிர்வாகம் தொடர்பான சில அடிப்படைகளை தெரிந்து கொண்டாலும் கூட. இது குர்ஆன் மற்றும் ஹதீஸ்களுக்கு வெளியில் இருந்து அவர்கள் சட்டங்களை எடுத்தார்கள் என்ற கருத்தாக மாட்டாது. ஏனெனில், இவர்கள் 4 வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்தியுள்ளனர். அவை வருமாறு:

1. அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இருந்து நேரடியாகச் சட்டங்களைப் பெறுதல்,
2. இஜ்மாஃ எனும் ஏகோபித்த முடிவின் அடிப்படையில் சட்டங்களை பெறல்.
3. "கியாஸ்" முறையில் சட்டங்களைப்பெறல்.
4. பொது நன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தல் என்ற பொது விதியை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களைப் பெறல்.

இதற்குப் பல அந்நிய நாடுகளில் காணப்பட்ட வழக்காறுகளை உதாரணமாகக் கூறலாம். ஸஹாபாக்களுடைய காலங்களில் வெற்றிகொள்ளப்பட்ட நாடுகளில் அதிகமான வழக்காறுகள் தென்பட்டன. இவை இஸ்லாமிய சரீஅத்தின் (பொதுத் தன்மைக்கும்) அடிப்படைக்கும் அல்குஆன் மற்றும் ஹதீஸ்களுக்கும் நேரடியாக முரண்படுவனவாகவே இருந்தன. இதன் காரணத்தால், இஜ்மாஃ, கியால், பொது நலம் பேணல் போன்ற அலகுகளின் அடிப்படையில் அவற்றை முஸ்லிம்கள் நிராகரித்துவிட்டனர்; இவை இஸ்லாமிய சமூகத்தில் எந்தப் பெறுமானத்தையும் பெறவில்லை.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

www.mahaludawa.org